# ஆத்மஜோதி



கவிஞர் பெருமானார் கச்சியப்ப முனிவர்

வைகாசி — ஆனி 1975

# ஆத்மஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு




எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.
— சுத்தானந்தர்


ஜோதி 27 - இராக்ஷத ஸ்ரீ வைகாசி - ஆனி 1-ம் உ (15-6-75) சுடர் 7-8


## பொருளடக்கம்


| | |
|---|---|
| குருவின் அவசியம் | 97 |
| திருத்தணிகைப் பதிற்றுப்பத்தந்தாதி | 98 |
| கச்சியப்ப முனிவர் | 99 |
| அருளின் நிழலிலே பொருள் | 103 |
| ஸ்ரீமண்டலீகராஜன் | 106 |
| திருத்தணிகைப் புராண உரைநடைச் சுருக்கம் | 109 |
| ஜீவ ரகஸ்யம் | 114 |
| "வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட" | 122 |
| திருமுறைகளின் பெருமை | 124 |



ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள்சந்தா 100—00
வருடச்சந்தா 5—00
தனிப்பிரதி சதம் 50

கௌரவ ஆசிரியர்: திரு. க. இராமச்சந்திரா

பதிப்பாசிரியர்: திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்

நாவலப்பிட்டி. [போன்: 353]

# குருவின் அவசியம்

(குருநானக்)

சத்குருவின் அருளின்றி பரம்பொருளைக் காண எக்காலத்திலும் முடிந்ததில்லை. பரம்பொருள் 'சத்குரு' என்னுந் திருநாமத்தில் உறைகிறான். இதையும் சத்குருவே காட்டித் தந்திருக்கிறார். சத்குருவின் உறவால் மாயமோகத்தைப் போக்கிக் கொண்டவர் சாசுவதமான முத்தியைப் பெறுகிறார். பரமாத்மாவிடம் உள்ளத்தை ஈடுபடுத்துவது உத்தமம். அவன்தான் அகிலத்தையும் வாழவைக்கிறான்.

உனக்கு நீந்தத் தெரிந்திருந்தாலும், பிறவிப் பெருங் கடலை நீந்திக் கடப்பதற்கு, இதில் திறமையுடன் தேர்ச்சி பெற்ற நீச்சல் நிபுணர்களிடம் அதாவது சத்குருமார்களிடம் பயிற்சி பெறுவாய்.

சத்தியத்தில் நிலை நிறுத்தத் தக்கவரையே குருவாகக் கொள்வாயாக. அவர் இறைவனோடு பேச வைப்பார்; திருநாமத்தை உபதேசித்து, அதன் மகிமையால் இறைவனோடு சேர்த்து வைப்பார். ஹரிபத்தர்களுக்கு பகவானிடமும், சத்தியத்திடமும் ஈடுபாடு கொள்வதைத் தவிர வேறுபணி கிடையாது. இவர்கள் தம்மனத்தில் சத்திய சொரூபனை பகவானைப் பிரதிஷ்டை செய்து கொள்கிறார்கள். பிறகு பகவத் சொரூபமாகவே மாறிவிடுகிறார்கள். உண்மையான சத்குரு பக்தனை இறைவன் திருவடிகளுக்கு அழைத்துச் செல்கிறார். இறைவனோடு சேர்த்து வைக்கிறார்.

### சத்குரு கண்ட பேருண்மை இது.

எல்லாம் பரமாத்மாவைச் சார்ந்திருக்கின்றன.
எல்லாவற்றிலும் பரமாத்மா நிறைந்திருக்கிறான்.
தம் திருத்தொண்டர்களுக்கு அவன் பிரத்தியட்சமாகிறான்.

# திருத்தணிகைப் பதிற்றுப்பத்தந்தாதி

[கச்சியப்ப முனிவர்]

பதியுளே இடந்தும் பாசம்
பற்றிய வாறும் பின்னர்
மதியுளே விராய பொல்லா
மலந்தபு மாறுஞ் சுத்தக்
கதியுளே கலந்து நிற்கும்
காட்சியும் தெரிந்தாட் கொண்டான்
ததியுளே நெய்போ னிற்கும்
தணிகையங் கடவு ளானே.

எங்கும் நீக்கமற இருந்தருளும் இறைவன் நிறைவினுக்குள் அடங்கி இருக்கவும், ஆன்மாவைப் பாசம் பற்றியிருந்தவாறும், பின்பு அறிவினுள்ளே கலந்து நின்ற கொடியமும் மலங்களும் நீங்குமாறும், களங்கமற்ற வீடுபேற்றிலே இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்கும் நிலேயும் தெளியும்படி செய்து ஆட்கொண்டான். தணிகையிலே வீற்றிருக்கும் கந்தக் கடவுள் பாலில் நெய்போல எங்கும் நீக்கமற நிறைந்துள்ளான்.

இறந்தவாற் காட்டுக் குற்ற
மிரிந்தன பொறிக ளைந்தும்
பறந்தன தோற்ற நான்கும்
பாறின மலங்கண் மூன்றும்
வறந்தன வினையிரண்டு
மாய்ந்தது பாச மூலம்
சிறந்த சீர்த் தணிகை நம்மான்
சிறக்கணித் திட்ட போதே.

மிகச்சிறந்த புகழினையுடைய திருத்தணிகையில் வீற்றிருக்கும் எம்பெருமானுகிய கந்தக் கடவுள் தமது கடைக்கண்களால் கடைக்கணித்திட்டருளிய போதே காமம், வெகுளி, மயக்கம் ஆகிய முக்குற்றங்களும் அழிந்தொழிந்தன; ஐம்பொறிகளும் விட்டு நீங்கின; நால்வகைத் தோற்றங்களும் இருந்த இடந் தெரியாமல் ஓடி ஒளிந்தன; மும்மலங்களும் அழிந்தொழிந்தன; வினைகள் இரண்டும் வற்றின; மூலமலமாகிய ஆணவம் அடியோடு அழிந்தது.

# கச்சியப்ப முனிவர்

[ஆசிரியர்]

கச்சியப்பர் என்றதுமே எமது மனதில் முன்னிற்பது கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியாராகும். கந்த புராணத்துக்குக் கச்சியப்பச் சிவாச்சாரியார் எப்படியோ, திருத்தணிகைப் புராணத்தால் சைவ உலகிலே உயர்ந்து நிற்பவர் கச்சியப்ப முனிவராகும்.

'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்று ஔவையாரால் பாராட்டப்பட்டதற்கேற்ப கச்சியப்ப முனிவரும் தொண்டை மண்டலத்திலுள்ள திருத்தணியிலே தோன்றியவராவர். இவர் பிறந்த குடியைக் காஞ்சிச் சைவ வேளாளர் பெருங்குடி என்று வழங்குவர். இதனால் இவர் முன்னோர் காஞ்சியிலிருந்து திருத்தணிகையில் குடியேறியவர் என்று அறியக் கூடியதாக இருக்கின்றது.

காஞ்சி மாவடி வைகுஞ் செவ்வேளைக் கந்தபுராணமாகப் பாடினார் கச்சியப்பச் சிவாச்சாரியார். திருத்தணி முருகன் பெருமையைப் பாடுதற்கும் காஞ்சியிலிருந்தே கச்சியப்ப முனிவர் செல்லவேண்டி அமைந்து விட்டது. கச்சியப்பர் என்ற பெயருக்கும் காஞ்சிக்கும் முருகனைப் பற்றிய புராணத்திற்கும் உள்ள தொடர்பு வேறு எதற்கும் கிட்டாத தொடர்பாகும்.

முனிவர் கருவிலேயே மெய்யுணர்வுத் திருவுடையவராய்ப் பிறந்தவர் ஆவர். ஆதலால் இவர் இளமையிலேயே இவ்வுலகியல் வாழ்விலே நாட்டம் இலராய்த் துறவு மனப்பான்மை உடையவராய்த் திகழ்ந்தார். மிக்க இளமையிலேயே தமிழ்மொழி, வடமொழி இரண்டிலும் பாண்டித்தியம் உடையவராய்த் திகழ்ந்தார்.

சனகாதி நால்வரும் நான்கு வேதங்கள் இருபத்தெட்டு ஆகமங்கள் யாவும் துறைபோகக் கற்றவர்கள். இவ்வளவு படித்தும் மெய்யறிவு கைகூடாமையால் சிவபிரானைச் சரணடைந்து மெய்யறிவு கைவரப் பெற்றனர். இதே போன்று முனிவரும் கல்வியில் வல்லுனராயிருந்தும் மெய்யறிவு கைவரப் பெருமையினால் சற்குருநாதனைத் தேடித் தல யாத்திரை புறப்பட்டார்.

> "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
> வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்னும் தாயுமானார் வாக்கு இந்த இடத்தில் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

முனிவர் தில்லைமுதலான திருத்தல யாத்திரையை முடித்துக் கொண்டு திருவருள் தூண்டத் திருவாவடுதுறையை வந்தடைந்தார். திருவாவடுதுறையை மணிவாசகர் கோகழி என்று குறிப்பிடுகின்றார். "கோகழி ஆண்டகுருமணி" என்று சிவபுராணத்தில் கூறுகின்றார். பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் பெற்ற நிலையாகும். முனிவருக்கும் பசுத்துவம் நீங்கிய இடம் திருவாவடுதுறையாகும்.

திருவாவடுதுறை ஆதீனம் என்றழைக்கப்படும் சைவ மடம் ஒன்று அங்கு உண்டு. இதனைத்தாபித்தவர் உமாபதி சிவாச்சாரியாருடைய மாணவர் நமச்சிவாய தேசிகராகும். முனிவர் அங்கு சென்றபோது மடத்திற்குத் தலைமை பூண்டிருந்தவர் வேலப்பதேசிகராகும். அவரை நமச்சிவாய மூர்த்தி எனவும் அழைப்பர். அவரை முனிவர் வணங்கிய மாத்திரத்திலேயே அவருடைய திருவருணோக்கத்தால் உய்தி பெற்றார். அப்போ திருமடத்துத் துணைத் தலைவராக இருந்தவர் அம்பலவாணதேசிகராகும். அவரிடத்து முனிவர் சைவ சித்தாந்த நூல்களைப் பயின்று மெய்யுணர்வு கைவரப் பெற்றார். அம்பலவாணதேசிகரிடத்திலேயே தீட்சையும் பெற்று மாபெருஞ் சைவத் துறவியாகத் திகழ்ந்தார். வேலப்ப தேசிகராகிய நமச்சிவாய தேசிகரிடத்தே ஞான

தீட்சை பெற்றவர் மாதவச்சிவஞானயோகிகள் ஆவர். இவ ரிடத்தே முனிவர் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களையும் பாணினீயம் போன்ற வடமொழி இலக்கணங் களையும் கற்றார். சிவஞான முனிவருடைய குருவாகிய நமச்சிவாய தேசிகரே கச்சியப்ப முனிவருக்கும் ஞான தீட்சை வைத்து ஞானகுருவாக விளங்கினர்.

திருவாவடுதுறை ஆதீனத்தைத் துறைசை ஆதீனம் என்றும் அழைப்பர். இத்திருமடத்திலே பெரியபட்டம் என் கின்ற பெருந்தலைமை பூண்போரை நமச்சிவாய மூர்த்திகள் என்றே குறிப்பிடுதலும், சின்னப்பட்டம் என்கின்ற துணைத் தலைமை பூண்டோரை அம்பலவாணர் என்றே குறிப்பிடு தலும் மரபாகும்.

கச்சியப்பமுனிவர் தணிகைப் புராணத்தில் கூறும் ஆசிரியர் வணக்கம் பின்வருமாறு:

அருள் வளர் நந்தி மேதகை விளக்கி
யருள்சிவ ஞான மோகத்தைத்
தெருள்வளர் தமிழ்ச்செய் தளித்த மெய்கண்ட
தேவனற் சந்ததி விளங்க
வருமொரு துறைசைத் திருநகர் நமச்சி
வாயதே சிகனேடு மிந்தக்
குருபரன் வழிவந் தருணனி கொழிக்குங்
குரவர்கள் பலரையுந் துதிப்பாம்.

மாபெருந் துறவியாகிய சிவஞானயோகியார் சிவத்தோடு இரண்டறக் கலந்த காலத்தே அச்சிவஞான முனிவரை கச்சியப்ப முனிவர் மனமுருகி வணங்கிய செய்யுள் வருமாறு:

"திண்ணவின்பச் சேவடியுந் திருவிழியும்
திருமார்பும் செல்வக் கையும்
நண்ணுமன்பர்க் கருள்கருணைத் திருமுகமும்
பசுங்குழவி நடையே யாகிப்
புண்ணியத்தின் பொலிவாகி யற்புதக்கோ
லக்கொழுந்தாய்ப் புலைநா யேற்குக்

கண்ணைவிட்டு நீங்காத சிவஞான
சற்குருவே கருணை வாழ்வே''

இக்கையறுநிலைச் செய்யுள் கச்சியப்ப முனிவர் சிவஞான முனிவரை நினைந்தோதியதாகும்.

மதுரையிலே நான்காவது தமிழ்ச் சங்கத்தை நிறுவித் தமிழ் வளர்த்தவர் பாண்டித்துரைத்தேவர் ஆவர். அவரது தமிழ்ப்பற்றையும் தமிழ்ப் புலமையையும் தமிழகம் எங்கும் அறியும். பாண்டித்துரைத்தேவர் அவர்கள் சிவஞான முனிவரைப் புகழ்ந்து பாடிய செய்யுள் ஒன்றின் மூலம் சிவஞான முனிவருக்கும் கருவாக விளங்கியவர் வேலப்பதேசிகராகிய நமச்சிவாய மூர்த்திகள் என்பது அறியக்கிடக்கின்றது.

''கலைதேர் நமச்சிவாயகுரு கருணைக்கடலிற் றிளைத்தாடிக்
கலகம் பாசத் தொடரறுத்துக் காமத்தறியை அறவீழ்த்தி
அலையும் சமயத் தருக்களைக்கீ ழடிவேரொடு மகழ்ந்தெறிந்திட்டு
அருளின் படாத்தை முகமேற்கொண்டு
ஆதிவேதாகமங்களெனும்
தொலையா மணிகளிருமருங்குந் தொனிக்கச் சைவமதம்
பொழிந்து
துங்கமொடு முலகமுற்றுஞ் சுற்றும் வெற்றி வாரணமே
மலையா தருளு முனிவர் சிகாமணியே வருக வருகவே
வளமார் துறைசைச் சிவஞான வள்ளால் வருக வருகவே''

சிவஞான முனிவரும் கச்சியப்ப முனிவரும் சமகால சம வயதினர் என்பது ஆராய்ச்சியாளர் கண்ட முடிபாகும். இருவரும் பிறந்த தினங்கள் தெரியாவாயினும் இருவரும் மறைந்த ஆண்டுகள் மூலம் ஒருவாறு யூகிக்கக் கிடக்கின்றன. சிவஞான முனிவர் சிவத்தோடு கலந்த காலம் கி. பி. 1784 ஆகும். கச்சியப்ப முனிவர் சிவத்தோடு கலந்தகாலம் கி. பி. 1788 ஆகும். கச்சியப்ப முனிவரியற்றிய நூல்கள் பின்வருமாறு.

திருத்தணிகைப் புராணம், திருவானைக்காப் புராணம், பூவாளூர்ப் புராணம், பேரூர்ப் புராணம், விநாயக புராணம்,

# அருளின் நிழலிலே பொருள்

திருவனந்தபுரம் வட்டாரத்தில் அபேதானந்த சுவாமிகள் என்னும் சாது ஒருவர் பொதுமக்களுக்கு நன்கு அறிமுகமாயுள்ளவர். பொதுமக்கள் என்று சொல்லுமிடத்து நானுவிதமான மனப்பான்மை உடையவர்கள் என்பதல்ல பொருள். பாரமார்த்திக வாழ்க்கையில் சிறிதளவாவது அவாக்கொண்டிருப்பவர்களுக்கு அவரைப் பற்றி நன்கு தெரியும். ஒரு கிராமத்தில் எளிய முறையில் ஆச்ரமம் ஒன்று அவர் அமைத்து வைத்திருக்கிருர். அதற்கு நிரந்தரமான நிதி ஒன்றும் கிடையாது. நிதி சேகரிப்பதில் அவருக்கு எண்ணமுமில்லை. விரும்பினுல் ஓரளவு அதற்குத் தேவையாய் உள்ள பொருள்களைச் சேகரிக்க அவருக்கு இயலும். அதற்கேற்ற செல்வாக்கும் அபேதானந்த சுவாமிகளிடம் உண்டு. ஆனுல் பொருள் சேகரிப்பதில் அவர் சிறிதேனும் கருத்துச் செலுத்துவதில்லை.

அபேதானந்த சுவாமிகள் ஆச்சிரமத்தில் அரியதொரு பாரமார்த்திகப் பணி இடையிடையே நிகழ்வதுண்டு. பிள்ளையார் கோயிலுக்கு ஒப்பான ஒரு சிறிய ஆலயம். உயரமான மேடையின் மீது அது கட்டப்பெற்றுள்ளது. அந்த மேடையின் மீதே நாலா பக்கமும் திண்ணையும் உண்டு. திண்ணையின் மீது நாலைந்து பேர் சுலபமாக வலம் வந்து கொண்டே இருக்கலாம். இடையிடையே ஆங்கு

---

காஞ்சிப்புராணம் பிற்பகுதி, சென்னை விநாயகர் பிள்ளைத் தமிழ், கச்சியானந்தருத்திரேசர்வண்டுவிடு தூது, ஆனந்த ருத்திரேசர் பதிற்றுப்பத்தந்தாதி, திருத்தணிகைப் பதிற்றுப் பத்தந்தாதி, பஞ்சாக்கரவந்தாதி, திருத்தணிகையாற்றுப் படை.

**வாழ்க கச்சியப்ப மாமுனிவர் வண்புகழ்!**

அகண்ட நாம பஜனை நடைபெற்று வருகிறது. ஒரு மாதம், இரண்டு மாதம், நான்கு மாதம் ஆகிய வெவ்வேறு கால அளவைகளில் அகண்ட நாம பஜனை நடைபெறும். அதற்கு சுமார் இருபது பேரை அவர் திரட்டுகின்றார். சுலபத்தில் அவருக்கு இருபது பேர் அகப்படுவார்கள். தம்பூரா ஒன்று உண்டு. நாம பஜனை நடைபெற்றுக்கொண்டிருக்கும் வரையில் அந்த சிறிய ஆலயத்தினுள் அணையா விளக்கும் எரிந்துகொண்டே இருக்கும். தம்பூராவை மீட்டிக் கொண்டு இரண்டுபேர் அகண்ட நாம பஜனை செய்து கொண்டு வலம் வருவார்கள். 'ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே, ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே' என்னும் மஹா மந்திரம் ஆங்குத் தொடர்ந்து ஜெபிக்கப்படுகிறது. சில காலங்களில் சிவநாமம் போன்ற வேறு மந்திரங்களும் ஜெபிக்கப்படுவதுண்டு. தம்பூராவை மீட்டிக்கொண்டு இரண்டு பேர் நிதானமாக திண்ணையின்மீது வலம் வந்த வண்ணமாய் நாம பஜனை பண்ணுவார்கள். ஒருமணி நேரம் பூர்த்தியானதும் இன்னும் இருவர் வந்து அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வார்கள்.

இப்படி மாறி மாறி இரவும் பகலும் அத்திண்ணையின் மீது இருவர் நடந்து கொண்டே நாமஜபம் பண்ணுவார்கள். தம்பூராவையும் மீட்டிக் கொண்டே இருப்பார்கள். ஒரு வேளை அதன் கம்பி தெறித்துப் போய் விட்டால் நாம பஜனையை நிறுத்தாது நடந்த வண்ணமாகவே கம்பியை மாற்றி அமைத்துக் கொள்வார்கள். இப்படி இரவும் பகலும் இறைவனுடைய திருநாமத்தை ஓதும் ஒலி ஓயாது கேட்டுக்கொண்டிருக்கும். இதில் கலந்து கொள்ள கூட்டங்கள் வரும். எத்தனைபேர் வேண்டுமானாலும் கோயிலின் திண்ணைக்குக் கீழே உள்ள மைதானத்தில் கோயிலைச் சுற்றி வந்து நாம பஜனையில் கலந்து கொள்ளலாம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சதுர்மாசியம் என்று சொல்லப்படும் ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாதி ஆகிய நான்கு மாதங்களில் இந்த அகண்ட நாம பஜனை இடையீடின்றி நிகழ்ந்தது. இருபது பேருடன் துவங்கிய அந்த ஆத்மசாதனம் நாளேற நாளேற பலபேரை

உடையதாக விரிவடைந்து வந்தது. வருகின்றவர்கள் உணவுப் பொருளும் கையில் கொண்டு வருவார்கள். சமைத்து அங்கிருக்கிறவர்களுக்கெல்லாம் அமுது செய்துவிட்டுத் தாங்களும் அமுது செய்வார்கள். எனவே உணவுப் பிரச்சனையைப்பற்றிய எண்ணமே கிடையாது. அது ஒழுங்காக நடைபெற்றுவரும். அந்த பஜனை பூர்த்தியான பொழுது கடைசி மூன்று நாட்களும் ஐயாயிரம்பேர் அதில் கலந்து கொண்டார்கள். அதற்கு வேண்டிய உணவுப் பொருள்களை அவர்களே கொண்டு வந்து எல்லோர்க்கும் முறையாக அமுது செய்து வைத்தார்கள். இந்தப் பாங்கில் அந்த ஆச்ரமத்தில் ஓயாது நாம பஜனை நிகழ்ந்து வருகிறது. இப்பொழுது தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு அதை நடத்துவதாகத் திட்டம் போட்டு அகண்ட நாம பஜனை செய்து வருகிறார்கள்.

அருளியக்கத்துக்குப் பொருள் பெருமிதமாகத் தேவையில்லை. பொருளைப்பற்றி கவலைப்படாதிருக்கிறவர்களுக்கே அருள் துறையில் சிறிதளவாவது பிரவேசிக்க முடியும். உயிர் வாழும் மாந்தர் நடத்துவது அகண்ட நாம பஜனை. அவர்கள் உணர்ச்சியே வடிவெடுத்தவர்கள்; இறைவனுடைய திருநாமத்தை ஓதுதல்மூலம் தங்களுக்கு உள்ள பரிபாகம் வரும் என்ற விசுவாசம் நிறைந்தவர்கள் அவர்கள். பக்தியுடன் கூடிய பலரைத் திரட்டி அவர்களிடத்து பக்தியை வளர்ப்பது அருள் இயக்கம். அத்தகைய அரிய பணி ஆங்கு அபேதானந்த சுவாமிகள் ஆச்ரமத்தில் ஓயாது நிகழ்ந்து வருகிறது. மக்கள் கிளப்புகின்ற பக்தி நிறைந்த பஜனை கோஷங்களைக் கேட்கின்ற பொழுதே மற்ற மக்களுடைய உள்ளத்திலும், பக்தி உரு எடுக்க ஆரம்பிக்கும். எரிந்து கொண்டிருக்கின்ற தீபம் மற்ற தீபங்களை ஏற்றிவைப்பதற்கு உதவுவதுபோன்று பக்தியில் ஈடுபட்டிருக்கின்ற மக்களே மற்றவர்களுடைய உள்ளத்திலும் பக்தி உதிக்கும்படி செய்து வைக்க முடியும். சத்சங்கம் என்பது இதுவே. நல்லாருடைய நலம் நிறைந்த நல்ல செயல்களைப் பார்த்து மற்றவர்களும் அதில் ஈடுபட விரும்புகின்றனர். இங்ஙனம் நல்லவர்கள் நல்லாராக விரும்புகின்ற மற்றவர்களுக்கு நேரில் தொடர்பு வைத்துத் தொண்டு புரிவதே அருள்பணியாகும்.

— தர்மசக்கரம்

# ஸ்ரீமண்டலீகராஜன்

(ஸ்ரீ மகாபக்த விஜயம்)

பாரத நாட்டிலே நீதியுடன் அரசாண்டு வந்த ஒரு அரசனுக்குத் தெய்வானுக்ரஹத்தால் ஒரு மகன் பிறந்தான். குழந்தையின் பெயர் மண்டலீகன். அவன் இளம் வயதிலேயே அரசன் கற்க வேண்டிய கலைகளையெல்லாம் கற்று, தேர்ச்சி பெற்றான்.

ஒரு சமயம் அவன் காட்டில் சஞ்சரித்தபோது ஒரு முனிவரைச் சந்திக்க நேரிட்டது. அவரை வணங்கி, தனக்கு உபதேசம் செய்யும்படி வேண்டினன். அவர் அவனிடம் அன்பு கொண்டு இராம தாரக மகா மந்திரத்தை அவனுக்கு உபதேசித்தார். அவன் உள்ளம் பூரித்து, 'எந்த வழியிலே இறைவனைத் தொழவேண்டும் என்பதையும் தெளியச் சொல்ல வேண்டும்' என்று வினயத்துடன் வினவினன். அதற்கு அவர், 'சிலர் இறைவனை உருவமும் குணங்களும் உள்ளவனுக வழிபடுகிருர்கள். சிலர் உருவமற்றவனுகப் பரந்து எல்லாவற்றிலும் நிறைந்தவனுகவும், எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவனுகவும் காண்கிருர்கள். இந்த ராம நாம தாரகம் மந்திரங்களுள் தலை சிறந்தது. எளியது. ஸ்ரீராமபிரான் தியானிப்பதற்கு எளியன். சுந்தர வடிவினன். உருவமற்றவனுகத் தியானிப்பதைக் காட்டிலும், ரூபத்தில் தியானிப்பது சுலபமானது' என்ருர். மண்டலீகன் சற்றே தயங்கி, 'சுலபம் என்பது ஒருபுறமிருக்கட்டும். எது சிறந்தது? எது சீக்கிரம் கிட்டக் கூடியது' என்பதற்கு விளக்கம் கோரினன். 'இதை சூட்சுமமாக நீயே ஆராய்ந்துதான் தெளிய வேண்டும். முதலில் உருவமுள்ளவனுக உன் மனதிலே தியானித்துப் பிறகு உருவமற்றவனுகத் தியானம் செய்யவேண்டும். அப்பொழுதுதான் எங்கும் நிறைந்தவன் என்ற உண்மை விளங்கும். பொருள்கள் வேறு வேருனவை; ஆனுல் அவற்றின் உள்ளுறையான சைதன்யம் ஒன்றுதான் என்பதும் புலப்

படும். பொதுவாக நீ காணும் பொருள்களில் ஐந்து விஷயங்கள் இருப்பதைக் கவனி. பொருள் இருத்தல். அதை உணர்தல், உணர்வின் அனுபவம், பொருளின் பெயர், அதன் உருவம் என்பன; அவ்வைந்து. உதாரணமாகப் பாலை எடுத்துக் கொள்வோம். அது பால். அது உள்ளது என்று தெரிந்து கொள்கிறோம். பருகுவதால் இன்பம் அடைகிறோம். திரவமான ரூபம் உள்ளது. பால் என்ற பெயரும் உள்ளது. ரூபம் நாமம் இரண்டையும் அகற்றிவிடுவோம். புரை ஊற்றி வைப்போம். அப்பொழுது உருவமும் பெயரும் மாறித் தயிர் என்று ஆகிவிடுகிறது. ஆனால் இருத்தல், அறிதல், அனுபவம் என்ற செயல்கள் அழிவதில்லை. இதையே சத், சித், ஆனந்தம் என்று குறிக்கின்றனர். இறைவன் ஒவ்வொரு பொருளிலும் சச்சிதானந்தமாக விளங்குகிறார். ஆகவே நாமரூபங்களில் பேதங்கள் உண்டு; அவை மாறுதலுக்குட்பட்டவை. இதை அறிந்த சத், சித், ஆனந்தம் என்பது எல்லாவற்றிற்கும் பொதுவானதென்றும், அதுவே ஈசுவர வியாபகம் என்றும் தெரிந்து கொள்வாய். புலன்களை அடக்கி, அந்தக்கரணத்தை ஒடுக்கி, காமம், வெகுளி, மயக்கம் என்ற முக்குற்றங்களையும் ஒழித்து உன் இதயத் தாமரையிலே இறைவனைக் காணப்பெறுவாய். உன் ஆசை நிறைவேறும்' என்று விளக்கமாக முனிவர் உபதேசித்தார். பிறகு மண்டலீகன் அரண்மனைக்குத் திரும்பி, குருநாதன் வழிகாட்டியபடி இறைவனை நினைந்து நினைந்து தியானத்தில் மூழ்கினான்.

மண்டலீகனின் பெற்றோர்கள், மகனுக்கு நல்ல இடத்தில் திருமணம் செய்து வைக்க விரும்பி, பக்கத்து நாட்டை ஆண்டு வந்த அரசனின் குமாரி சுலக்ஷணை என்பாளை மணம் செய்வித்தும், சில நாட்களுக்கெல்லாம் மகனுக்கு முடி சூட்டிவிட்டும், வானப்பிரஸ்த ஆசிரமத்தை நாடினர்.

அவனின் தெய்வ பக்தியினால், அவனது அரசாட்சி மக்கள் வாழ்த்தும் வகையில் மிகச் சிறப்புற்று விளங்கியது.

அவன் எல்லோரிடத்திலும் இறைவனையே கண்டான். ஆகவே மக்களுக்குப் பணி செய்வதே இறைவன் பணி என்று கொண்டான்.

சுலக்ஷணாதேவி கல்வியறிவிலும், தெய்வ பக்தியிலும் நிறைந்தவள் என்றாலும் அவளால் அவனது நடவடிக்கைகளிலிருந்து அவனது ஆத்ம ஞானத்தை அறிந்து கொள்ள முடியவில்லை. ஆலயங்களிலே விழாக்கள் நடத்துதல், அரண்மனை பூஜா க்ருஹத்தில் விசேஷமான அர்ச்சனைகள், ஆராதனைகள், ஏழை எளியவர்க்கு உணவளித்தல், பாரா யணங்கள், அதிதி பூஜை இவைகள் நடைபெற்றுவர ஏற் பாடுகள் செய்திருந்தான். இவ்வளவு கார்யங்கள் நடை பெறுவதிலும் தன் கணவனின் பாராட்டுதலோ, கலந்து கொள்வதோ இல்லாமையால் அவளுக்கு வருத்தம் மிகுதி யாக இருந்து வந்தது. மண்டலீகனின் மானஸ பக்தியை அவள் உணர்ந்தாள் இல்லை. நாட்கள் செல்லச் செல்ல, தன் கணவர் ஒரு நாளேனும் பகவந்நாமாவைச் சொல்ல மாட்டாரா என்று ஏக்கமுற்றிருந்தாள். ஒருநாள் இரவு நித் திரை சமயம் ஏற்பட்ட தெய்வ தரிசனத்தால், 'ராமா! ராமச் சந்திரா! ராமபத்ரா!' என்று துதித்தான். இதைச் செவியுற்று ஆனந்தங்கொண்டு, சுலக்ஷணை, மறுதினம் ஒரு விசேஷ மான உற்சவம், அன்னதானம் இவைகளை ஏற்பாடு செய் தாள். அரசன் எதற்கென்பதை அறிந்து, "என் நெஞ்சகக் கோயிலில் ராமதாரகத்தை வைத்துப் பூட்டியிருந்தேன். இப்பொழுது அவர் வெளியே வந்து விட்டாரா? என்னைப் பிரிந்து விட்டாரா" என்று உணர்ந்து வருந்தியதும், அவன் உயிர் அவன் உடலை விட்டு அகன்றது. தன் அறியா மையை நினைத்து, சுலக்ஷணை ஸ்ரீராமன் திருவருளை மன முருகி இறைஞ்சவே, ஸ்ரீ ராமன் கிருபையால் உயிர் பெற்று எழுந்தான். பின்னர் தம்பதிகள் பல காலம் வாழ்ந்து, ஸ்ரீ ராமநாம மகிமையைப் பரப்பி வந்தார்கள்.

ஸ்ரீராமநாம மகிமை என்னே!

---

# திருத்தணிகைப் புராண உரைநடைச் சுருக்கம்

—[ முத்து ]—

சான்றோரை உடைமையால் பெருமை பெற்ற தொண்டை நாடு ஆறுகள் பலவற்றை உடைமையால் அழகு பொலிந்து விளங்கியது. திருத்தணி என்றதும் முருகப் பெருமானு டைய நினைவே முன்னிற்கும். இப்பதி மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றாலும் சிறப்புற்று விளங்குவது. மன் னுயிர்களுக்கு அருளும் பொருட்டு முருகப் பெருமானே மூர்த்தியாகவும், தலமாகவும், தீர்த்தமாகவும் எழுந்தருளி யிருக்கின்றார் என்பது புராண வரலாறு.

இத்திருத்தணி இந்திரனுடைய விண்ணுலகத்தைப் போலவும், நான்முகனுடைய சத்திய உலகத்தைப் போலவும் திருமாலுடைய வைகுண்டத்தைப் போலவும், சிவபெருமா னுடைய சிவலோகத்தைப் போலவும் சிறந்து விளங்குவது. தணிகை மலையின் சிறப்பைப் பிறர் சொல்லக் கேட்டாலும், மலையை அடைந்து முருகக் கடவுளைப் போற்றி வழிபடு வோம் என்னும் நோக்கத்தோடு திருத்தணிகை மலையை நோக்கிப் புறப்பட்டாலும், அவ்வாறு புறப்பட்டவர்களு டைய தீவினை முற்றும் அழிந்தொழிந்து போகும். இத்த கைய தெய்வத்தன்மையுடைய அம்மலையாகிய தாமரை மல ரிடத்தில் முருகக் கடவுள் புகழ் பொருந்திய சரவணப் பொய்கையின் கண் பிறந்த காலத்தில் எழுந்தருளியிருந்த தன்மையைப்போல் எழுந்தருளியிருப்பர்.

பொன்னுலகத்தில் உள்ள செல்வங்கள் எல்லாம் தன் னிடத்திலே நிறையப் பெற்ற காரணத்தால் இவ்வூர் சீபூரண கிரி என்று பெயர் பெற்றது. அடியார்களுடைய விருப்பங் களை ஒரு கணப்பொழுதில் நிறைவேற்றுதலால் கணிகாசலம் என்று பெயர் பெற்றது. எல்லாவற்றிற்கும் மூலகாரணமாகிய

சிவபெருமானே முருகக் கடவுளை மூலகாரணன் என்று தொழுதபடியால் மூலாத்திரி என்று பெயர் பெற்றது. கருங் குவளை மலர் நாள்தோறும் மலர்தலின் அல்லகாத்திரி என்று பெயர் பெற்றது. இக்காரணத்தினுல் நீலோற்பலகிரி, உற்பல கிரி, கல்லாரகிரி, காவிமலை, நீலகிரி, குவளைச்சிகரி எனப் பல வாறு கூறுதலும் உண்டு. கற்பத்தின் முடிவிலும் இந்நகர் அழியாமையால் கற்பசித் என வழங்குதலும் உண்டு. சூர பதுமனெடு செய்த போரினுல் உண்டாகிய சினமும் வேடர் களோடு செய்த போரினுல் உண்டாகிய சினமுந் தணியப் பெற்ற இடமாதலால் செருத்தணி எனவுந் திருத்தணிகை எனவுங் கூறப்பெறும். முருகக் கடவுள் பிரணவப் பொரு ளைச் சிவபிரானுக்கு உரைத்தருளிய இடமாகையால் பிரண வார்த்த நகரமெனவும், இந்திரன் வரம் பெற்ற இடமாகை யால் இந்திரநகரி எனவும், நாரதர் விருப்பமுற்ற இடமா கையால் நாரதப் பிரியம எனவும், அகோரன் என்னுந் தவத் தினன் வீடுபெற்ற நகராகையால், அகோரகைவல்யப்ரதம் எனவும், கந்தக் கடவுள் வீற்றிருப்பதால் கந்தகிரி எனவும் இப்பதிக்குப் பெயர்கள் உள்ளன.

திருக்கைலாய மலையிலே சிவபெருமான் உமாதேவியா ரோடு எழுந்தருளியிருந்தார். அவர்கட்கு நடுவில் முருகப் பெருமான் அமர்ந்திருந்தார். அப்பொழுது அந்த இடத்திற் குச் சந்திரகாசன் என்பவன் வந்தான். அவன் சிவகணங் களுக்குட் சிறந்தவன். அவன் சிவ்பெருமானைப் பலவாறு புகழ்ந்து போற்றினுன். தனக்குப் பி ர ண வ ப் பொருளை உரைத்தருள வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். சிவபெருமான் திருவருள் செய்து சந்திரகாசனுக்குப் பிர ணவப் பொருளை உரைத்தருளினுர். முருகக் கடவுள் சிவ பெருமான் சந்திரகாசனுக்குரைத்தருளிய பிரணவப் பொரு ளுரையைத் தெரிந்து கொண்டார். ஆனுல் தாம் அதனைக் கேட்டுணர்ந்து கொண்ட தன்மையை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. நாட்கள் பல சென்றன.

பிறகு முருகக் கடவுள் இறைவனையும் இறைவியையும் விட்டுத் தனியாக இருந்த திருக்கோயில் ஒன்றிலே எழுந்

தருளி இருந்தார். அக்கோயில் சிவபெருமானுடைய திருவோலக்க மண்டபத்திற்குச் செல்லும் வழியில் அமைந்திருந்தது. ஒருநாள் தேவர்களும் திருமாலும் இந்திரனும் நான்முகனுஞ் சிவபிரானை வழிபடற் பொருட்டுத் திருக்கைலேயை அடைந்தார்கள். அத்தேவர்களுள் நான்முகன் ஒழிந்த பிற தேவர்கள் முருகக் கடவுளேயும் வணங்கிச் சென்ருர்கள். நான்முகன் ஒருவன் மட்டும் இம்முருகன் சிறுவன் தானே இவனே எதற்காக வணங்க வேண்டும் என்னும் எண்ணமுடையனுய் வணங்காது ஒதுங்கிச் சென்ருன்.

இறைவனே வணங்கச் சென்ற தேவர்களில் நான்முகன் ஆணவத்தோடு சென்ற தன்மையை அறுமுகப் பரமன் அறிந்து கொண்டார். நான்முகனுடைய செருக்கினே அழித்தொழிக்க வேண்டும் என்று முடிவு செய்தார். "தேவர்கள் வெளியே வரும்பொழுது நான்முகனேப் பிடித்துக்கொண்டு வந்து என் முன் நிறுத்துவாயாக" என்று தம்முடைய இளவலாகிய வீரவாகு தேவருக்குக் கட்டளேயிட்டருளினுர். வீரவாகு தேவரும் அறுமுகப் பரமன் கட்டளேப்படி நான்முகனேப் பிடித்து வந்து திருமுன் நிறுத்தினுர். இதனேக் கண்ட பிற தேவர்கள் அச்சங் கொண்டவர்களாய்த் திக்குக் கொருவராக ஓடிப் போயினர்.

முருகக் கடவுள் நான்முகனிடம் ஓம் என்றதற்குப் பொருள் கேட்கத் தெரியாது தடுமாறினுன். இப்போதும் அவனது அகங்காரம் குறையவில்லே. முருகன் நான்முகனுடைய தலேயிற் பலமாகக் குட்டிக் கடிய சிறையில் அடைத்தார். சிவபெருமான் நான்முகனேச் சிறையினின்று விடுவிக்குமாறு கூறியபோது பிரணவத்திற்குப் பொருள் தெரியாதவனே சிறை விடுவதாற் பிரயோசனம் இல்லே என்ருர். சிவபிரான் முருகக் கடவுளேப் பார்த்து, "நீ பிரணவத்தின் பொருளே அறிவாயாளுல் கூறுவாயாக" என்ருர். அதற்கு முருகப் பெருமான் "அதனேக் கூறவேண்டிய முறைப்படி கூறவேண்டுமே அல்லாமல் கண்டபடி சொல்லலாமோ" என்ருர்: சிவபெருமான் முருகக் கடவுளேப் பார்த்து, "நீ விருப்

பத்தோடு தங்கியிருக்கும் தணிகைமலைக்கு அருளுரை பெறும் பொருட்டு நாம் வருகின்றோம். மாசி மகமும் வருகின்றது. அப்பொழுது கூறுவாயாக'' என்றார். அவ்வாறே தணிகை மலைக்குச் சென்று வடகிழக்கெல்லையில் ஒரு கணப்பொழுது தணிகாசல முருகனை எண்ணி அமர்ந்தார். குருநாதனாகிய முருகக் கடவுள் சிவபிரான் இருந்த இடத்திற்குத் தெற்குப் பக்கத்தில் வந்து அமர்ந்து தந்தையாகிய சிவபிரானுக்குப் பிரணவ மறைப்பொருளை முறையோடு உரைத்தருளினார்.

தனக்குத் தானே மகனுங் குருவும் மாணவனுமாகிய சிவபிரான் ஓங்கார வடிவினனாகிய முருகக் கடவுளின் அறிவுரையைக் கேட்ட அளவில் பெருமுழக்கஞ் செய்து நகைத்துக் கூத்தாடினார். சிவபெருமான் அவ்வாறு பெருமுழக்கஞ் செய்து இன்பக் கூத்தாடியபடியால் அவ்விடம் வீராட்டகாசம் என்று பெயர் பெற்றது. பிரணவப் பொருளைக் கூறியபடியால் தணிகை பிரணவ அருத்த நகர் என்னும் பெயரையும் பெற்றது. இத்தணிகையில் ஒரு கணப்பொழுது தவம் முதலிய நல்வினைகளைச் செய்பவர்கள் பெறுதற்கரும் பயனை அடைவார்கள்.

ஒரு காலத்தில் முருகக் கடவுள் ஞான சக்தியாகிய வேற்படையைப் பெற விரும்பினார். திருக்கைலையில் உள்ள கங்கையைத் தணிகை மலைக்கு வரவழைத்தார். தாம் இருக்குமிடத்திற்கு வடகீழ்ப் பக்கத்தில் ஆபத் சகாய மூர்த்தியை அமைத்து வழிபட்டார். சிவக் குறியினையும் நிலைநிறுத்திப் போற்றினார். சிவபிரான் முருகக் கடவுளின் திருமுன்னர்த் தோன்றி, "உனக்கு வேண்டியது யாது?'' என்று கேட்டார். முருகக் கடவுள், "அவுணர்களுடைய உயிரைக் குடிக்கும் ஞான சக்தி வேண்டும்'' என்று கேட்டார். சிவபிரான் அச்சிறப்பினைக் கொடுத்து சிவக்குறியிடையே மறைந்தருளினார். இவ்விலிங்கத்திற்குக் குமாரலிங்கம் என்று பெயர். இது மலைமீது கோயிலின் வடக்குச் சுற்றில் உள்ளது. ஞான சத்தி பெற்ற சுவாமிக்கு ஞானசத்திதரர் என்று பெயர். அவரால் வரவழைக்கப்பெற்ற கைலைக் கங்கைக்குக் குமாரதீர்த்தம் என்று பெயர். மாசி மகத்தில் இப்புனித

நீரில் நீராடிக் குமாரலிங்கத்தையும் ஞானசத்திதரரையும் போற்றி வழிபடுதல் சிறப்புடையது.

நான்முகன் தணிகை மலையையடைந்து மலைக்குக் கிழக்குத் திக்கில் புனித நீர் ஒன்றுண்டாக்கி ஆபத்சகாய விநாயகரைப் போற்றினன். இறைவனையும் முருகக் கடவுளையும் வணங்கி முருகப் பெருமானைக் குறித்துத் தவஞ் செய்தான். முருகக் கடவுள் காட்சி கொடுத்து விரும்பிய வரத்தினையுங் கொடுத்து அருளினர். வைகாசித் திங்கள் விசாக நாளில் பிரம தீர்த்தத்தில் நீராடுவது மிகச் சிறப்பாகும்.

அகத்திய முனிவர் ஒரு காலத்தில் சிவபிரானுடைய திருவடிகளில் விழுந்து வணங்கிச் செந்தமிழ் மொழியை எனக்கு அறிவுறுத்தி மெய்யறிவினையும் வழங்குதல் வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். சிவபெருமான் அகத்தியரை நோக்கி எத்தகைய மேன்மை வேண்டுமாயினும் நாம் அறிவுரை பெற்ற இடமாகிய திருத்தணிகை மலைக்குச் சென்று முருகனை நோக்கித் தவஞ் செய்வாயாக. அவ்வாறு செய்யின் உன்னுடைய எண்ணம் நிறைவேறும். அத்தணிகைக்குப் போகலாம் என்று ஒருவர் எண்ணினுலும், அவ்வூர்ப் பக்கமாகச் சென்ருலும் செல்வேன் என்று கூறிப் பத்தடி நடந்தாலும் அவர்களுடைய நோயெல்லாம் அடியோடு ஒழிந்து போகும்.

செங்கமல மலரேய்க்கும் ஒருதிருக்கை
குறங்கமைத்துச் செம்பொன்மேரு
துங்கவரிச் சிலைக்கடவுள் அருள்ஞான
சத்தியொரு தொடிக்கை யேந்திப்
பொங்குமருட் கருணைவிழிக் கடையொழுக
மலர்ந்தமுகப் பொலிவினேடும்
அங்கணமர் ஞானசத்தி தரனையகத்
துறநினைப்போர் அவனே ஆவர்.

❀

# ஜீவ ரகஸ்யம்

( பாகவதம் )

வாழ்வின் பல நிலைகளிலும் விதிக்கப்பட்டிருக்கின்ற கடமைகளைத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று யுதிஷ்டிரர் விண்ணப்பம் செய்து கொண்டபோது நாரத பகவான் மேலும் கூறுகின்றார்:

சமய ஒழுக்கங்கள், ஆன்மீக சாதனைகள், இவற்றின் முதன்மையான நோக்கம் தன்னடக்கமும், தியானம் கைகூடுதலுமேயாகும்.

இந்த உடலை ஒரு ரதத்துக்குச் சமானமாக உவமிக்கப்பட்டிருக்கிறது. புலன்களே இதிற் பூட்டியுள்ள குதிரைகள்; மனமே கடிவாளம்; அறிவே சாரதி; ஜீவசக்திகளே உருளைகள்; ஆசாபாசங்களே ஆரைக்கால்கள்; புலனின்ப நாட்டமே எதிரே நீண்டு கிடக்கின்ற பாதையாக விரிகிறது. நானென்னும் முனைப்பே ரதாரூடனாக அமர்ந்திருப்பவன். கோபம், பகைமை, பொறாமை, துக்கம், பேராசை, மயக்கம், கர்வம், உயிர் மோகம் ஆகிய இடையூறுகள் வழியெல்லாம் எதிர்ப்படுகின்றன. ஆரோகணித்திருப்பவன் ரதத்தையும், குதிரைகளையும் கட்டுக்கடக்கிக் கொண்டு செலுத்தக் கூடும்போது, அவனது இதயம் தூய்மையுடையதாகிறது. இறையருளை அவன் தன்னில் கண்டு கொள்ளவும் கூடியதாகிறது. விவஸ்தை யென்னும் வாளை ஞானமென்னும் சாணையில் கூராக்கி, எதிர்ப்படும் இடையூறுகளை யெல்லாம் வெட்டிச் சாய்த்து முன்னேறுகிறான். அவனுக்கு அச்சம் அகன்று, இறையின்பம் வசமாகிறது.

வாழ்வின் எல்லா நிலைகளிலும் மனிதகுலம் பயிர் செய்ய வேண்டிய பண்புகள் சில உண்டு. இவையாவன:-

உண்மையுணர்ச்சி, அன்பு, பொறை, நியாயபுத்தி, மனவடக்கம், ஆசைகளை அடக்கியாளுதல், தீங்கு செய்யாமை,

அளவறிந்து துய்த்தல், கருணை, கபடமின்மை, திருப்தி, குருபக்தி, பயனில விவாதிக்காமை, சத்தான உண்மையை சதா நாடுகின்ற போக்கு, மன்னுயிர் அனைத்தும் கடவுளின் வடிவென்றுணர்ந்து பணிபுரிதல்.

முனிவர்களின் அனுபவ உண்மைகளாக அறிவிக்கப் பட்டவையும் சில உண்டு. இவற்றையும் கவனிக்க வேண்டியது அவசியமாகும்.

அவனவன் செய்கின்ற செயலுக்குத் தக்கபடி மேலான அல்லது கீழான பிறவி யெடுக்க, இந்த மானிடப் பிறவி ஒரு வாயிலாக அமைந்திருக்கிறது. மேலான உயிர் லக்ஷ்யத்தையும், பரிபூர்ண விடுதலையையும் பெறக்கூடிய சாதனமாகவும் உள்ளது மானிடப் பிறவி. புலனின்பங்களின் வழியே சென்று இன்பத்திற்கு அவதியுறும் மனிதன் அதைவிட்டொழித்து, தனக்குள் தானே ஊன்றிப் பார்க்கப் பயின்று கொண்டால் அப்பொழுதே அவனுக்கு அமைதியும் ஆனந்தமும் கிடைக்கிறது. செல்வத்தையும், உலக இன்பத்தையும் நாடித் தவிக்கும் தன்மையில்தான் பயமும், துயரமும், மயக்கமும் தோன்றி வேர் கொள்கின்றன. எனவே, மனிதன் செல்வத் தேட்டையிலும், உலக இன்பங்களிலும் நாட்டம் கொள்ளாமல் இருக்கக் கடவன்.

அரும்பாடுபட்டுத் தேனை வண்டு சேமித்த போதிலும் மனிதன் அந்தத் தேனைத் தட்டிப் பறித்துக் கொண்டு விடுகிறான். அது போலவே பாடுபட்டுத் தேடிப் பெறுகின்ற செல்வச் சேமிப்பை மனிதன் அனுபவிப்பதென்பதும். சர்ப்பங்களின் அரசன் தனது உணவுக்காகத் தவித்து அலைவதில்லை. இருந்த இடத்திலேயே அவனுக்கு இயற்கை அருள்கின்ற உணவோடு அவன் திருப்தியடைகிறான். ஞானிகளும் இப்படித்தான் அமைகிறார்கள். தாமாக எதிர்ப்படுகின்றவற்றை மட்டுமே அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். எங்கேயோ ஒரு மரத்தினடியில் படுத்துறங்குவதும், சில நேரம் பெரிய மாளிகை யொன்றில் உபசரிக்கப் பெறுவதும் இவர்களுக்கு ஒன்றே. எங்கும், எப்போதும் இவர்கள் ஆனந்த நிலை

யிலேயே இருக்கிறுர்கள். எனவே எந்த நிலையிலும் திருப்தி யுடன் அமையக் கற்றுக் கொள்ள வேண்டும்.

யார் ஒருவன் தனது உள்ளத்தில் நிறைவை யுடையவனு யிருக்கிருனே அவனே எங்கும் எப்பொழுதும், எதனிலும் நல்லதையே காணும் பார்வையைப் பெறுகிருன். பாதரக்ஷை அணிந்து நடப்பவன் பாதையில் கிடக்கும் முட்களை லட்சியம் செய்ய வேண்டியதில்லையல்லவா?

அது போலவே, எல்லா நிலைகளிலும் நிறைவுபெற்ற மன முடையவர்கள், வாழ்க்கைப் பாதையில் இறைந்து கிடக்கும் முட்களுக்குத் தயங்கி நிற்க வேண்டியதில்லை. இருப்பது போ தாதென்ற அதிருப்தியுணர்ச்சி ஒன்றுதான் அமைதியின்மைக் கும், ஆசா பாசங்களுக்கும் காரணமாகிறது. எங்கே அதி ருப்தி நிலவுகிறதோ, அங்கே, எல்லா முயற்சிகளும், அறிவும் புகழும், வெற்றியும், ஞானமும் வீணே. அதிருப்தியுற்ற இத யத்தில் உலகம் முழுவதின் சுகங்களெல்லாம் கிடைத்தாலும் கூட, மேலும் தணியாத வேட்கையும், பேராசையுமே குடி கொண்டிருக்கும், இந்த அதிருப்தி ஒன்றினுலேயே தாழ்வுற்ற ஆன்ம கோடிகள் அனந்தம். எனவே உலக வஸ்துக்களின் மீதுள்ள நாட்டத்தை முதலில் விட்டுவிடு. பேராசையை விட்டொழி. இதனுல் சினத் தீயிலிருந்து நீ விடுதலைபெற முடியும்.

புலனின்ப நாட்டங்களிலிருந்து விலகும் வழியைக் கற் றுக்கொள்வாயாக. தெய்வ நினைவும், எல்லாம் ஒரு பொருள் என்ற உண்மையறிவும் கொள்வதன் மூலம் சகல பயங்களி லிருந்தும் விடுபட்டு நிற்பாயாக. நித்தியம், அநித்தியமென்று பகுத்துணர்ந்து கொள்ளக் கற்றுக் கொள்வதன் மூலம், துக் கங்களிலிருந்தும், மாயையிலிருந்தும் விடுபட்டு விலகுவா யாக. தூய்மையும் புண்ணியமும் நிறைந்த முனிவர்களையும் ஆன்ம பரிபக்குவிகளையும் பின்பற்றி அவர்களுக்குத் தொண்டு புரிவதன் மூலம் தற்பெருமை, தன்னகந்தைகளைக் கொல்வா யாக! எண்ணங்களையும் பேச்சையும் கட்டுக்கடக்குவதன்

மூலம், தியானத்திற்கு இடையூறுகளாய் இருப்பவற்றை அகற்றிக் கொள்வாயாக!

யாரேனும் உனக்குத் துன்பிழைத்தால், அதைப் பொருட்படுத்தாமலிருப்பதும், திருப்பித் துன்பிழைக்காமலும், தவிர துன்பிழைத்தோருக்கு நன்மையே செய்தலும் வேண்டும்; ஏனெனில் அன்பே, பகைவெல்லும் அருமருந்து. உலக விஷயங்களில் சிதறிப் போகின்ற மனதை இழுத்துப் பிடிப்பதே தன்னடக்கத்திற்கு வழி. இதில் முயற்சிக்கிறவன் தனது உணவு, பானம், உல்லாசம் இவற்றில் மிதமாக நடந்துகொள்ளக் கடவன்! சோம்பல் என்பது துளியும் உதவாது. தன்னடக்கம் பயில விரும்புவோன் முதலில் தன்னை ஒரு நன்மாணுக்கனுகச் செய்துகொள்ள வேண்டும். அப்பொழுதே சற்குருவின் அருளால் அவனிடமிருந்து அஞ்ஞான இருள் விலகி, ஞான ஒளியில் அவன் மூழ்கித் திளைக்க முடியும்.

ஆசார்யன் அருள்கின்ற பயிற்சிகளைப் பெறுவதற்குமுன், மனோவாக்குக் காயங்களை ஒருமுகப்படுத்திக் கொள்வது மிகவும் அவசியமாகும். பிராணுயாமம் போன்ற சாதனைகளின் மூலம் உடல் நலிவேதும் இல்லாமல் காத்துக்கொள்வதுடன், உடலுக்கும் உள்ளத்துக்கும் ஒருங்கே வலிமையும் அமைதியும் தருவதாக அமையும் சத்வ ஆகாரத்தை உட்கொள்ள வேண்டும். நேராக உட்கார்ந்து சுகாசனத்தில் அமர்ந்து, ஓம் என்னும் பிரணவ மந்திரத்தை உருவேற்றுவாயாக. ஆசைகள், மற்ற எண்ணங்கள் யாவற்றிலுமிருந்து மனதை விடுவித்துக் கொண்டு விடுதல் வேண்டும். கட்டவிழ்த்துக்கொண்டு மனம் பல திசைகளிலும் அலையத்தான் முயலும். அப்போது அதனைப் பிடித்து இழுத்து, ஹிருதய கமலத்தின் நடுவில் நிறுத்துவதற்கு முயலவேண்டும். இடைவிடாமல் முயன்று பயிற்சி செய்தால் எல்லையற்ற அமைதியும் ஆனந்தமும் சித்தியாகும். விறகு தீய்ந்து படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்து இறுதியில் ஒன்றுமில்லாமல் போகும் போது தீயும் தானே அணைந்துபோகிறதல்லவா? அதுபோல வெளி விஷயங்களினுல் மனம் தூண்டப்

படுவதில்லை என்ற நிலைக்கு வந்துவிடும்போது மனம் தானே அடங்கி சாந்தியில் லயித்துவிடும். மனதின் அமைதியற்ற அலைகள் ஓய்ந்து அடங்கிவிடும்போது, மெதுவாகப் பேரானந்தம் அங்கே முகிழ்த்துவரும். ஓம் என்னும் ஒளி பொருந்திய வில்லில், தூய்மையடைந்த மனமாகிய அம்பை நாணேற்றி இழுத்துவிட்டால், பரமான்மாவாகிய லட்சியத்தில் போய் மனமாகிய அம்பும் ஒன்றிப் பொதிந்துவிடும்.

ஈஸ்வரனிடத்தில் போலவே குருவினிடத்திலும் ஒருவன் சிறந்த பக்தியைச் செலுத்தக்கூடுமாயின் தன்னடக்கமும், தன்னுணர்வும் எளிதில் கைகூடுமென்பதில் தடையில்லை. ஏனெனில் குருவானவர் ஈச்வராம்சமாகவே எழுந்தருளியிருப்பவர். சதா குருவின் அருகில் பழகியிருப்பதும், அவரது வழியில் நின்று தியானம் புரிதலும், நல்லுபதேசங்களைக் கவனமாகக் கற்றலும் ஆகிய சாதனைகளின் மூலமே, ஒரு மாணவன், ஆன்மகோடிகள் அனைத்திற்கும் ஏகான்மாவாக அமர்ந்திருக்கும் இறைவனை, எல்லாப் பொருள்களிடத்தும் காண்கின்ற வழியைக் கற்கலாகும்.

குருகுலவாசம் முடிந்த பிறகு, விடைபெற்றுச் சென்று இல்லறம் ஏற்கவும், அல்லது துறவறம் பூணவும், அல்லது தீர்த்த ஸ்தல யாத்திரை புரியும் பிக்ஷுவாகவும், அவனவன் மனப்போக்கு, ஆசிரியரின் ஆலோசனைக் கட்டளை, இவற்றிற்குத் தக்கபடி உலகில் வாழக் கடவன். இல்லறத்தனாக இருப்பவன் தனது கடமைகள் அனைத்தையும் கடவுட் பணியாகவே கொண்டு நடத்த வேண்டும். சமய குரவர்களைப் போற்றுவதும், சத்சங்கத்தை நாடியிருப்பதும், இவனது கடமைகள். தனது ஓய்வு நேரங்களை வேத வாக்கிய பாராயணங்களில் செலவிட வேண்டியவன். உலக நடைமுறைகளில் இவன் ஈடுபட்டிருந்த போதிலும் கூட எல்லாவிதமான பந்தங்களிலிருந்தும் விடுபட்டுத் தனித்திருக்கும் மனப்பான்மையை இவன் பெறக் கடவன். செல்வமுடையவனாக இவன் இருக்கலாம் எனினும் எல்லாச் செல்வங்களுக்கும் உடையவனாகிய இறைவனின் பிரதிநிதியாக மட்டுமே தன்னைக் கருதக் கடவன். கட

வுளால் உலகுக்கு அனுப்பப் பட்டிருக்கிற ஜீவகோடிகளில், தீனர்களாகவும் திக்கற்றோராகவும் அல்லலுறும் எளியவரைக் கண்டறிந்து அவர்களுக்கு உபசரிப்பதன் மூலம் கடவுள் தொண்டு செய்வதில் இவன் கண்ணுயிருக்க வேண்டும். சதைப் பற்றோ, புலனின்பவேட்கையோ இவனைத் தங்கள் வசமாக்கிக் கொள்ளவிடக்கூடாது. நித்யா நித்ய விவேகத்துடன் கூடியிருக்கவும் ஆத்மானுபூதி பெற்று இறையுணர்வில் திளைத்து நிற்கவும் கற்க வேண்டும்.

சஞ்சாரியாகத் திரியும் பிக்ஷு எங்கு வேண்டுமானாலும் செல்லக்கடவன்; எனினும் எந்த ஒரு இடம் அல்லது தேசத்திலும் ஒட்டாது இருக்க வேண்டியவன். தன்னில் தான் திளைக்கும் சாதனையில் இன்பமும் சாந்தியும் பெறவேண்டியதே பிக்ஷுவின் வழி. காணும் பொருள்களனைத்தும் ஒன்றுபோலக் காண்பதும், பிறவியின் பயன் பரம்பொருளென்பதும் இவனது உணர்வாக அமையும். கடவுள் நினைவைக் கலைக்கும் கல்வியெதிலும் கவனம் செலுத்தாமல் வேத வாக்யங்களை மனனம் செய்வது இவனது செயல்முறை. வலிந்து சீடர்களை சிருஷ்டிப்பது இவனது வழியன்று. பொய்யான ஞானசித்திகளைப் பிறருக்கு வாக்களிப்பதும் பிழையாகும். பிக்ஷு ஒருவன் உலக சுகானுபவங்களில் சிரத்தையைப் பறிகொடுப்பதோ, இல்வாழ்வான் ஒருவன் தனது உலகக் கடமைகளைப் புறக்கணிப்பதோ, இரண்டுமே பரமஞான வாழ்க்கைப் பாதையில் நாணத்தக்கதும், ஏமாற்றிக் கொள்வதுமான காரியங்களே. சத்யத்தின் ஸ்வரூபமாக விளங்கும் இறைவனைத் தியானிப்பதும், அவனுடைய அமுத வாக்குகளின்பால் உட்செவியைத் திறந்து வைத்திருப்பதுமே வாழ்வின் மேலான கடமைகள். இறைவனுடைய நாம சங்கீர்த்தனமும், அவனுடைய புகழைப்பாடுவதும், அவனுடைய பெருமை பேசுவதும் வேண்டும். அவனுடைய லீலைகளைத் தியானிக்க வேண்டும். சதா அவனையும் அவனுடைய சாட்சாத்தாரத்தையும் நினைத்திருக்க வேண்டும். கருணை வடிவான கடவுளைப் பணிந்து அவன் பணிக்கே தன்னை அர்ப்பணிக்க வேண்டும். அவன் முன்னிலையில் சரண் என்று தலைசாய்த்து,

நீங்காத மெய்த்துணை அவனென்று உணர்தல் வேண்டும். இந்தப் பெரும் படைப்பு முழுவதையும் ஒரு பெரிய விருட்ச மாகக் கொண்டால், பொருள்களெல்லாம் கிளைகளும் இலை களும் ஆகும். இறைவன் வணங்கப்பெறும் போது சர்வமும் இன்பமடைகின்றன. இறைவன் எங்கும் நிறைந்து நிற்பவன். சராசரங்கள் அனைத்தும் அவனே. தேசங்கள் யாவும் அவனு டையன. அவனே எங்கும் விளங்கக் காண்கிறோம். எனி னும் இறைவனுடைய புகழும் பூசனையும் மிகுதியாகக் காணும் இடங்களே திவ்ய தேசங்களாகின்றன. சத்தான ஒன்றை நாடுவோர், சத் சங்கத்தில் கலந்து நிற்றலே நேரான வழி. படைக்கப்பட்ட ஒவ்வொன்றிலும், அவனே நிறைந்து இயங்குகின்ற காரணத்தால் ஹரியே, புருஷன் என்று கூறப்படுகிறான். எங்கும் அவனே இருந்தபோதிலும், ஒவ்வொரு பொருளிலும் தெய்வ விளக்கம் மாறுபட்டுத் தோன்றுகிறது. மனித வடிவில் இறைவனுடைய சைதன்யம் மிகுந்து வெளிப்படத் தெரிகின்றது. அதிலும் மனிதர்களின் வளர்ச்சிக்குத் தக்கபடி இந்த விளக்கமும் பற்பல தரமுடை யனவாயமைகின்றன. இது அவரவரின் அறிவு, உணர்வு, இவற்றைப் பொறுத்திருக்கிறது. அறிஞனான ஒரு அந்தணன் கூறியதாவது:-

"சுக துக்கங்களில் புகுந்து நான் அறிந்துகொண்ட பிறகு, ஆத்மா என்பது ஆனந்தமயமானதென்றும், மனி தனே அந்த ஆன்மாவென்றும் அறிந்தேன். உலக சுகங்களை நாடித்திரியாமல் மனிதன் உள்முகமாக நோக்கத்தொடங்கும் போதுதான் ஆனந்தமயமான ஆத்ம சைதன்யத்தைக் காண் கிறான். தானல்லாது வேறின்றித் தனித்தியங்கும் ஒன்றாக இருப்பதுவே ஆத்மா. அதுவே சத்யம். இதை உணராத வரையிலுமே மாயையின் பிடிப்பு இருக்கிறது. இந்த ஆன்ம சாட்சாத்காரத்தை அடைய, நாமரூப பேத உணர்ச்சிகளைப் போக்கி அனைத்தையும் ஒன்றாய்க் காணும் பக்குவம் வரவேண் டும். வேற்றுமைகளினூடே ஒருமையைக் காணப் பயிலவேண் டும். இந்த ஒருமையைப் பயின்று அடையும் சாதனையில், கார ணப் பொருளும் காரிய விளைவும் வெவ்வேறல்ல வென்றும்,

காரண காரியம் இரண்டும் ஒன்றே யென்றும் உணர்வதே வழி. படைப்பு முழுவதும் படைப்போன் விளக்கமே.

''செயலில் இந்த ஒருமையைப் புரிய, மனோ வாக்குக் காயங்களால் இறையுணர்வில் இயங்குதலே சாதனை. பார்க்கும் பொருள்கள் அனைத்திலும் கடவுளைக் காண்பதன் மூலமே ஸ்தூலமாக இந்த ஒருமையை சாதிக்க முடியும். தோற்றமும் நடுவும் இறுதியும் பரம்பொருளே! போகமும் போகியும் அவனே! மிக உயர்ந்ததும் மிகத் தாழ்ந்ததும் அவனே! அறிபவனும் அறியப்படுவதும் அவனே! பேசப்படும் சொல்லும், பேசுகின்ற மூச்சும் அவனே!

''சேதனப்பொருளும், சைதன்யமும் அவனே! இதைக் கடைப்பிடிப்பவனுக்கு, கடவுள் ஒருவன் மட்டுமே உண்மையில் உள்ளான் என்று உணர்ந்து கொள்வது எளிதாகும். அவனை விட்டு வேறானதொன்றோ அவனைக்கடந்து நிற்பதான ஒன்றோ யாதொன்றுமில்லை யென்பதும் விளங்கும்.''

இந்தப் பேருண்மையை உணர்ந்து கொண்ட சாதகனை, உலகத்தில் வேறெந்தப் பொருளும் கவரக்கூடிய சக்தி படைத்திருக்கவில்லை. யாரொருவன் சாந்தியும், என்றென்றும் ஞானமும் பெறுகின்றானோ அவனே விடுதலை பெற்ற ஆன்மா. அவனுடைய அறிவு அகண்டாகாரமாக விளங்கிய போதிலும், அவன் ஒரு குழந்தையைப் போல மிகுந்த சௌலப்யத்துடன் திகழ்கின்றான்.

வானொளி எமக்கு வழி காட்டுகவே.

கண்ண னெம்பெரு மானருள் வாழ்கவே!
கலிய ழிந்து புவித்தலம் வாழ்கவே!
அண்ண லின்னருள் நாடிய நாடுதான்
அவலம் நீங்கிப் புகழில் உயர்கவே!

# "வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட"

- மறைமலையடிகள் -

"உண்டி முதற்றே உணவின் பிண்டம்". உயிர் எதை முதலில் வேண்டுமென்கிறது? உண்டி-உணவை முதன்மையாக உயிர் வேண்டுகிறது. உணவு செவ்வையாக இல்லாத போது உயிரை வளர்ப்பது கடினமாயிருக்கிறது. உலகத்திலே உயிர் வாழ்க்கைக் காக, உடம்பின் வாழ்க்கைக்காக வேண்டியது உணவுதான். உணவின் பிண்டமாகிய நம் உடல் உணவினாலே தான் வளர்கிறது. உணவினால் தான் உலகில் போர் நடைபெறு கிறது. மற்றவர்களின் உணவைப் பற்றிக் கவலைப்படாமல் உணவு எனக்குத்தான் வேண்டும் என்று சொல்வதால்தான் போர் மூளுகிறது அல்லவா?

'தன்னது என்று சாற்றுவான்" என்று தாயுமான அடி களார் சொல்லுகிறார். ஆகவே, கடவுளே உன்னை நான் எப்படி வேண்டுவேன்? உயிர் இல்லாத போது உயிர் அளித்தாய். பிற வியிலே தாழ்ந்த எண்ணமுடைய நான் கேட்கத் தெரியாத காலத்தில் எனக்குப் பால் கொடுத்தாய். உணவுப் பிண்டம் அளித்தாய்; ஆனபடியினாலே நீ உனக் கென்று எதையும் வைத்திராமல் எனக்குத் தருகிறாய். உலகத்திலே உள்ள உன்னுடைய பொருளுக்கு என்னுடையது அவனுடையது என்று மக்கள் போரிடுகிறார்கள்.

யார் எதைக் கேட்கிறார்களோ, அதை ஈசன் தருகிறார். "வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட' என்ற அடியைத் திருமுருகாற்றுப்படையிலே காணலாம். இறைவன் இன்பமே வடிவாக, அன்பே வடிவாக, அறிவே வடிவாக இருக்கிறார். அறிவும் அன்பும் இன்பமும் பெற, யார் யார் விரும்புகிறார்களோ அவர்களுக்கெல்லாம் அதனைத் தருகிறார்.

"இத்தனை பொருள்களையும் அமைப்புகளையும் இறைவனை வேண்டினால் கிடைக்கிறது. கிடைத்தவுடன் "என்னது" "என்னது" என்று சொல்லிப் பெரும் பிழை செய்யலாமா? இறைவற்குரிய பொருளை இறைவனுடையது என்று சொல்லிப் பிறருக்கு வழங்காதிருப்பது பெரும் பிழையல்லவா?

“கோயம்புத்தூரிலே என் நண்பர் ஒருவர் கோடிக்கணக்கான பொருள்களை வைத்திருந்தார். அவர் காரில்மோதிக் காலமானார். அவர் உடலை உதறிச் சென்ற பொழுது என்ன சொன்னார் என்று அன்பர்களைக் கேட்டேன். ‘‘நான் அறம் செய்யாத தினாலேதான் இப்படி இறக்கிறேன்’ என்று வருந்திச் சொன்னாராம். இறக்குந் தறுவாயிலாவது அறம் செய்ய வேண்டுமென்று எண்ணுகிறார்களே! நோய் காணும் பொ ழு து அ ற ம் செ ய் ய வில்லையே என்று வருந்துவோரும் உண்டு.

நாய் இருக்கக் கல்காணாதவர் – கல் இருக்க நாய் காணார். அதைப்போல் செல்வம் உள்ளபோது அறம் செ ய் ய விரும்பார். நோய் வந்த போது அறம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் பிறக்கிறது. ஆனால், நோயுள்ளதால் அச்சமயத்திலே அறம் செய்ய முடிவதில்லை. நோயுள்ளபோது உறவினர்களை அறம் செய்யும்படி ஏவினால் அவர்களோ அறம் செய்யவிரும்பாது, எப்பொழுது இறப்பார்? எப்பொழுது பொருள் கிடைக்கும்? என்ற எண்ண முடையவர்களாக இருப்பார்கள்.

இயற்கை என்றால் கடவுள், கடவுள் என்றால் இயற்கை இரண்டும் உண்மையே; இயற்கை என்று கொ ண் டா லு ம் கொள்ளுங்கள்; ஓரளவுக்கு இவை ஒன்றே!

எல்லாம் இறைவனுடையது என்றிருக்க அதனை எனது எனது என்று சொல்லிக் கொ ண் டு பிறருக்கு வழங்காதது பெரும் பிழையல்லவா? தமிழ்ச் சான்றோரும் பிறரும் இதை அறிந்தால் உலகில் போரில்லை. இக்கருத்தை இப்பொழுது எல்லாரும் பரப்ப முயற்சி செய்கிறார்கள்.

தன்னலம் ஒழிந்து போகும் – ஒழிய வேண்டும் எ ன் று Tin Burn; Estral, Huxely, Darwin (ரின்பேன், எஸ்ரல், ஐக்ஸிலி, டர்வின்) முதலியமேனாட்டு அறிஞர்கள் நூல் வாயிலாக நன்கு பரப்பியிருக்கிறார்கள். விரும்பிய உணவைக் கண்டபடி உண்டால் சரியாக வெளிக்குவருவதில்லை. எல்லாவற்றையும் தானே உண்டு விடுதல் கூடாது. அறிவுடையவர்கள் பகுத்து உண்ண வேண்டும்.

‘‘பகுத்துண்டு பல்லுயிரோம்புனூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை’’

என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

‘‘தமிழின் தனிச்சிறப்பு’’ என்னும் நூலிலிருந்து

உதவியவர்: ம. சி. சிதம்பரப்பிள்ளை.

# திருமுறைகளின் பெருமை

—[ மு. கு. புண்ணியகோடி ]—

முன்னுரை:

முன்னைப் பழம் பொருட்கு முன்னைப்பழம் பொருளாக வும் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனுகவும் விளங்குகின்ற பெருமானுகிய சிவபெருமானுடைய அருமை பெருமைகளை உணர்த்தும் பாடல்களே திருமுறைகளாகும்.

மூலமும் நடுவும் முடிவுமின்றிக் காலமும் கணக்கும் கடந்த காரணனுக விளங்குகின்ற பெருமானைப் போற்றிப் புகழும் நூல்களைச் 'சாத்திரம்', 'தோத்திரம்' என இருவகை யாகப் பாகுபடுத்தியுள்ளனர் பெரியோர். மெய்கண்டார் அரு ளிய சிவஞானபோதம் முதலான நூல்களைச் சாத்திரம் எனவும், திருஞானசம்பந்தர் முதல், சேக்கிழார் ஈருக 27 ஆசிரியர்களால் பாடப்பெற்ற 12 திருமுறைகளைத் தோத்திரம் எனவும் கூறினர்.

## திருமுறை என்பது என்ன?

'திரு' என்னுஞ் சொல், செல்வத்தைக் குறிக்கும். அதாவது 'வீடுபேறு' எனப் பொருள்படும். 'முறை' என்பது அங்கிங்கெனுதபடி அமர்ந்திருக்கும் இறைவனை வழிபடும் முறை எனப் பொருள்படும். எனவே, திருமுறை என்பதற்கு, மோட்ச செல்வத்தை அளிக்கக்கூடிய இறைவனை வழிபாடு செய்வது எனப் பொருள் கொள்ளலாம். இனி இத்திருமுறைகள் தோன்றிய வரலாற்றையும், அவை பன்னிரண்டு திருமுறைகளாகப் பிரிக்கப்பட்ட வரலாற்றையும் நோக்குவோம்.

## இராசராசசோழன்:

பிற்காலச் சோழர்களுள் மிகமிகச் சிறப்புப்பெற்றவனும், தஞ்சை மாநகரில் பெரிய கோவிலைக்கட்டுவித்து, தன்னுடைய புகழை உலகம் அழிகின்ற வரையில் நிலைநிறுத்தியவனும்

கி. பி. 9-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்தவனுமான இராசராசன் என்னும் சோழப் பெருமன்னனுல், நம்பியாண்டார் நம்பிகளின் உறுதுணையோடு திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் அருளினுல் திருமுறைகள், தில்லைப் பதியில் கண்டெடுக்கப்பட்டன.

மன்னன் வருத்தம்:

செல்வ நெடு மாடங்கள் செறிந்திருக்கின்ற தில்லைப் பதியில் கனகசபையின் மேற்புறத்தில் கண்டெடுக்கப்பட்ட திருமுறைகளைக் கறையான்கள் மூடி அழித்த நிலையைக் கண்ட மன்னன் சொல்லொணுத் துன்பமுற்ருன்.

"பொய்யுடையோர் அறிவுதனைப் புலன்கள் மூடும்
பொற்பதுபோல் போதமிகும் பாடல் தன்னை
நொய்ய சிறுவன் மீகம் மூடக் கண்டு
நொடிப் பளவினிற் சிந்தை நொந்தான்"

ஆண்டவன் அசரீரி:

சிந்தை நொந்து செயல் தடுமாறி நிற்கும் மன்னனுடைய மனக் கவலையைக்கண்ட இறைவன்,

"வேதச் சைவநெறித் தலைவரெனும் மூவர் பாடல்
வேய்ந்தனபோல் மண்மூடச் செய்தே ஈண்டு
வேண்டுவன வைத்தோம்"

என்று ஆண்டவன் அருளிய அசரீரியைக் கேட்ட மன்னன் மனம் ஒருவாறு தெளிந்தான்.

பன்னிரு திருமுறைகள்:

இங்ஙனம் கண்டெடுக்கப்பெற்ற மூவர் பாடல்களையும் முதல் ஏழு திருமுறைகளாகவும், மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், திருக்கோவையார் ஆகிய இரண்டினையும் சேர்த்து எட்டாந் திருமுறையாகவும், திருமாளிகைத்தேவர் முதலான ஒன்பதின்மர் அருளிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகியவற்றை ஒன்பதாந் திருமுறையாகவும், திரு

மூலர் அருளிய திருமந்திரத்தைப் பத்தாந் திருமுறையாகவும், மதுரை சொக்கநாதப் பெருமானுன திருவாலவாயுடையார் முதலான பன்னிருவர் பாடிய பிரபந்தங்களைப் பதினோராந் திருமுறையாகவும், சேக்கிழார் பெருமான் அருளிய திருத் தொண்டர் புராணமான பெரிய புராணத்தைப் பன்னிரண் டாந் திருமுறையாகவும் பகுத்தளித்தனர்.

திருமுறைகளின் பெருமை:

திருஞானசம்பந்தப்பிள்ளையாரருளிய 'தோடுடைய செவி யன்' முதலாக, சேக்கிழார் பெரியபுராணம் ஈருக ஏறத்தாழ 18360 பாடல்கள் உள்ளன. இவற்றை முறையோ டும், நெறியோடும் ஓதியுணர்கின்றவர்கள் உலகில் எல்லா வகையான செல்வங்களையும் பெற்றுப் பிறவியாலாம் பயனைப் பெறுகின்றனர் என்பதனைக் கண்கூடாகக் காணுகின்றோம். வள்ளலைப் பாடியதனுல், தான் வேறு இறைவன் வேறு என் றல்லாத அத்வைத நிலையினைப் பெற்ருர் மாணிக்கவாசகர். இவ்வாறே இன்னும் பல அடியார்களும் அன்பர்களும் இறை வனைப் பாடி இனிய அருளைப் பெற்றுள்ளார்கள்.

அற்புதங்கள்:

மறைகளால் அடைக்கப்பட்ட கதவினைத் திறக்கவும் மூட வும், அரவு தீண்டி இறந்த வணிகனையும், அந்தணச் சிறுவ னையும் எழுப்பவும், கொல்ல வந்த யானை மெல்லத் திரும்பிச் செல்லவும், முதலையுண்ட பாலனை மீண்டும் அழைக்கவு மான பல்வேறு அற்புதங்களைச் செய்யக் காரணமாக இருந் தவை நம் பன்னிரு திருமுறைகளேயாகும். மேலும், ஊமைப் பெண்ணைப் பேச வைக்கவும் இத்திருமுறைகளால் முடிந்தன என்ருல், இவற்றின் பெருமையினை என்னவென்று கூறுவது?

திருமுறை ஓதுதலின் பயன்:

உடலை உணவு வளர்ப்பதுபோல, உயிரையும் உணர்வை யும் வளர்க்கவல்லவை திருமுறைப் பாடல்களேயாகும். இம்மை மறுமை ஆகிய இரண்டிலும் துன்பம் நம்மைத் தொட

ராதிருக்க வேண்டுமாயின் இறைவனை இசையோடு பாடுங்கள் என்பது திருஞானசம்பந்தரின் திருவாக்கு.

> ''மாதோர் கூறனை வலஞ்சுழி மருவிய மருந்தினவயல் காழி
> நாதன் வேதியன் ஞானசம்பந்தன் வாய் நவிற்றிய தமிழ்மாலை
> ஆதரித்து இசைகற்று வல்லார் சொலக் கேட்டுகந்து அவர்தம்மை
> வாதியாவின மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம் வந்தடையாவே''

என்பதாகும். மேலும், பிறிதோரிடத்தில் இத்திருமுறைகளை ஓதுவதனுடைய பெருமையைக் குறிப்பிடும் போது,

> ''மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலும்
> கண்புகார் பிணியார்'' என்றறிவிக்கின்றார்கள்.

தேவாரம்:

'தேவாரம்' என்னுஞ் சொல், தே+ஆரம் எனவும், தே+வாரம் எனவும் பிரியும். தே+ஆரம் என்பது தெய்வத்திற்குச் சூட்டப் பெறும் பாமாலையெனவும், தே+வாரம் என்பது தெய்வத்தின் மீது அன்போடு பாடப்பெறும் இன்னிசைப் பாட்டு எனவும் பொருள்படும். 'வாரம்பாடும் தோரிய மடந்தை' என்னும் சிலப்பதிகாரப்பாடல், 'வாரம்' என்னுஞ் சொல் இசையைக் குறிக்கும் என்பது நன்கு விளங்கும்.

பண்:

'பண்' என்னுஞ் சொல், இசை, அல்லது இராகத்தைக் குறிக்கும். ஏழிசையால் இசைப்பயனாய் இன்னமுதாய் இருக்கின்ற இறைவனை இன்னிசையால் பாடுவதே சாலச் சிறந்தது என்றெண்ணிய அருளாளர்கள் அனைவரும் இனிய இசையினாலேயே பாடிப்பரவசமடைந்தார்கள். முற்காலத்தில் இறைவனை இசையோடும் பாடுவதற்குத் 'தேவபாணி' என்றும் இக்காலத்தில் 'தேவாரம்'' என்றும் வழங்குவாராயினர்.

**இறைவன் அருள்:**

இனிய இசையால் இறைவனைப் பாடிய நம் சமயக் குரவர்கள், தம் வாழ்வில் பல்வேறு பயன்களைப்பெற்ற தோடமையாது, பற்பல அற்புதச் செயல்களையும் செய்துள்ளனர். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞான சம்பந்தர், பொற்றாளமும் முத்துச் சிவிகையும், முத்துப் பந்தரும், வாசியற்றகாசும் பெற்றார். சலம்பூவொடு தூபம் மறந்தறியாது தமிழோடு இசைபாடிய நாவுக்கரசர், தம் சூலை நோயை நீக்கிக் கொண்டதோடு, திருவீழிமிழலையில் பஞ்சத்தால் வாடிய மக்களின் வாட்டத்தைப் போக்கினார். இம்மையில் சோறும் கூறையும் மறுமையில் சிவலோகமும் தருகின்ற இறைவனை இன்னிசையால் பாடி இழந்த தம் கண்களை மீண்டும் பெற்றார் சுந்தரர். வான்பழித்து இம் மண்புகுந்து மனிதரை ஆட்கொண்ட திருஞானசம்பந்தர் ஆணையிட்டுக் கூறுகின்ற இடத்தில் ஆண்டவனைப் பாடும் அடியார்கள் வானில் அரசாள்வது உறுதி என்று அறுதியிட்டுக் கூறுகின்றார்கள்.

'தேனமர் பொழில் கொளாலை விளைசெந் நெல்துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞானமுனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல்மாலை யோதும் அடியார்கள் வானில்
அரசாள்வ ராணை நமதே'

என்றும் உறுதிப் படுத்திக் கூறியுள்ளார். மேலும்,

'மூரல் வெண்மதி சூடும் முடியுடை
வீரன் மேவிய வேற்காடு
வாரமாய் வழிபாடு நினைந்தவர்
சேர்வர் செய்கழல் திண்ணமே'

என்றும் திருமுறைகளை ஓதுவதனால் உண்டாகின்ற பயனைச் சம்பந்தர் கூறியுள்ளார்.

"தாந்திருத்தித் தம்மனத்தை ஒடுக்காத் தொண்டர்
தனித்தொரு தண்டுன்றி மெய்தளரா முன்னம்
பூந்துருத்தி பூந்துருத்தி என்பீராகில்
பொல்லாப்புலால் துருத்தி போக்கலாமே"
'ஐயாறே ஐயாறே என்பீராகில்
அல்லல் தீர்ந்து அமருலகம் ஆளலாமே'

—ஆறுந்திருமுறை.

"ஊரன் உரைத்த உறுதமிழ் பத்தும் வல்லார் வினைபோய்ப்
பாரும் விசும்பும் தொழப் பரமனடி கூடுவரே"
'பல்லுயிர் வாழுந் தெண்ணீர்ப்பழ மண்ணிப் படிக்கரையை
அல்லியந் தாமரைத்தார் ஆரூரன் உரைத்த தமிழ்
சொல்லுதல் கேட்டல் வல்லாரவர்க்கும் தமர்க்கும் கிளைக்கும்:
எல்லியும் நண்பகலும் இடர்கூறுதல் இல்லையன்றே'

—ஏழாந்திருமுறை.

"ஆசையறுப் பாசம் விடாய் ஆனசிவபூசை பண்ணுய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய்—சீசி
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே! உனக்கென்னவாய்" —சிவபோகசாரம்.

அன்னையின் அருள்:

உலகில் தோன்றிய அருட்புலவர்களுள் சிலர் கருவிலேயே புலமைத் திருவைப் பெற்றவர்கள் என்றும், தாமே முயன்று பெற்றவர்களென்றும், அன்னையின் அருளினுல் கவிபாடுந் திறனைப் பெற்றவர்களென்றும் மூன்றுவகையாகச் சொல்வதுண்டு.

இம்மூன்று திறத்தாருள், கம்பர், காளிதாசர், குமரகுருபரர், காளமேகப் புலவர், அருணகிரியார் முதலிய அருட்சான்றேர்கள் ஆண்டவன் அருளாலும், அன்னையின் அருளாலும் கவிபாடுந்திறனைப் பெற்றுர்கள் என்று கூறலாம். அத்துடன், திருக்கடவூரில் திருக்கோயில்கொண்டிருக்கும் அன்னை அபிராமியின் அருளைப்பெற்று 'அபிராமி அந்தாதி'பாடிய அபிராமி பட்டரும் குறிப்பிடத்தக்க சிறப்புடையவராவார்.

Registered at the G. P. O. as a Newspaper M. L. 359/00

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்,

இந்தச் சோதியுடன் சோதி 27 ஆண்டுச் சேவையை ஆரம்பித்து 7–8ம் இதழ் வெளிவருகிறது. இன்றைய நிலையில் கடுதாசித் தட்டுப்பாடும் விலை ஏற்றமும் யாவரும் அறிந்ததே. எம்மால் இயன்றளவு ஆத்மீக சேவை செய்வதே எமது குறிக்கோள். ஆகவே சந்தா நேயர்கள் தங்கள் சந்தாக்களை பெப்ரவரி மாத இறுதிக்குள் அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் தமது சந்தாவை உரியகாலத்தில் அனுப்பி வைப்பதோடு ஒவ்வொரு புதிய அன்பர்களைச் சேர்த்து உதவினால் ஆத்மீகம் பரவுவதற்கு உதவி செய்தவர்களாவீர்கள்.

## ஆத்மஜோதி நிலையம்,

### நாவலப்பிட்டி (இலங்கை).

அச்சிடுவிப்போர்:– ஆத்மஜோதி நிலையத்தினர்.
அச்சிடுவோர்:– ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்.
வெளியிட்ட திகதி:– 15-6-75.